




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

PRGI NO: TNTAM/25/A1018








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 241 23.2.2026 MONDAY MAASI : 11 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 241 23.2.2026 திங்கள்கிழமை மாசி : 11 விலை : ரூ.5/–


## தமிழகத்தில் பயங்கரம் :

# "திருப்பூரில் தீவிரவாதிகள் கைது"



## சின்னாளபட்டி சமயபுரத்து மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம் அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு கும்ப மரியாதை

திண்டுக்கல், பிப்.23-

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி, ஜீவா நகர் திரு.வி.க. நகர் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சமயபுரத்து மாரியம்மன் திருக்கோவில் மகா கும்பாபிஷேக விழா இன்று மிக விமர்சையாக நடைபெற்றது. இதில் தமிழக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அமைச்சருக்கு உற்சாக வரவேற்பு:

கும்பாபிஷேக விழாவில் பங்கேற்க வந்த அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு, கோவில் கமிட்டியாளர்கள் சார்பில் மேளதாளங்கள் முழங்க, கும்ப மரியாதையுடன் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. கோவில் கட்டுமானத்திற்கு நிதியுதவி வழங்கியமைக்காக அமைச்சருக்குப் பரிவட்டம் கட்டி, மாலை அணிவித்து நிர்வாகிகள் நெகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகேசன், திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், பேரூர் கழக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத்தலைவர் ஆனந்தி பாரதிராஜா, முன்னாள் துணைத் தலைவர் எம்.வி.முருகன், முன்னாள் பொருளாளர் எஸ்.ஆர்.முருகன், வார்டு உறுப்பினர்கள் சாந்தி, ராஜூ, தாமரைச்செல்வி, வேல்விழி, கிளைச் செயலாளர்கள் சைக்கிள் கடை மணி, ஆனந்த் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

விழாவிற்காக ஏற்பாடுகளை கோவில் தலைமை பூசாரி இளையராஜா (எ) அமாவாசை தலைமையில் மூத்த நிர்வாக குழுவினர் என்.சந்தானம், டி.ஆர்.ராம், ரவி, டி.என்.போஸ், ரவிக்குமார்ஜி, கண்ணன், கே.பி.முருகன், தலைமையிலான நிர்வாகக் குழுவினரும், விழாக் கமிட்டியாளர்களும் யாகசாலை பூஜைகளை டாக்டர்.ஏ.நவீன்குமார் குருக்கள் தலைமையினான சிவாச்சாரி;யார்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

## திமுக அரசுக்கு பழனிசாமி சரமாரி கேள்வி

திருப்பூர், பிப்.23-

திருப்பூரில் தீவிரவாதிகள் கைது செய்யப்பட்ட சம்பவம் குறித்து கருத்து தெரிவித்துள்ள அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, இந்த விவகாரத்தில் தமிழக அரசின் அணுகுமுறை குறித்து சரமாரியாக கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில், "கொலை, கொள்ளை என்பதையெல்லாம் தாண்டி, தீவிரவாத தாக்குதல் எனும் கொடூர உச்சத்துக்கு தமிழகத்தின் சட்டம் ஒழுங்கை சீர்குலைத்து வைத்திருக்கிறது திமுக அரசு. தீவிரவாதிகள் கைது என்பது தமிழகத்தில் மத்திய அரசின் என்ஐஏ போன்ற அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், இங்குள்ள மாநில அரசு இதை தடுக்க என்ன செய்தது?

திமுக அரசின் பயங்கரவாத எதிர்ப்புப் படை (ஏடிஎஸ்) என்ன செய்துகொண்டு இருந்தது. இந்த கையாலாகாத திமுக ஆட்சியை தொடர விட்டால், 1998 போல மீண்டும் ஒரு கோரச் சம்பவத்துக்கு கூட வழிவகுத்துவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. தமிழகத்தில் அமைதி நிலை திரும்ப, திமுக ஆட்சிக்கு முடிவுகட்ட வேண்டும்" என்று பழனிசாமி தெரிவித்துள்ளார்.



தமிழக பாஜக மூத்த தலைவரும், மத்திய இணையமைச்சருமான எல்.முருகன், "திருப்பூரில் பயங்கரவாத சதித்திட்டம் தீட்டிய 8 தீவிரவாதிகளை டெல்லி போலீஸார் கைது செய்துள்ளனர். டெல்லி போலீஸார் வந்து கைது செய்யும் வரை தமிழக போலிஸார் என்ன செய்துகொண்டு இருந்தனர்?

தீவிரவாத தாக்குதல் எனும் கொடூர உச்சத்துக்கு தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து இருக்கிறது. ஆனால் அதை கட்டுப்படுத்த தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை. பயங்கரவாதத்தை கட்டுப்படுத்துவதற்கு பதிலாக பயங்கரவாத செயல்களில் ஈடுபடும் நபர்கள், அமைப்புகளுக்கு திமுக மறைமுக ஆதரவு அளித்து வருகிறது.

கோவை குண்டுவெடிப்பு குற்றவாளிகளை விடுதலை செய்யக் கோரி ஓயாது பிரச்சாரம் செய்து வருபவர்களும் திமுக கூட்டணி கட்சியினரே. தமிழகத்தில் ஆளும் திமுக அரசுக்கு மக்களின் பாதுகாப்பை பற்றி எந்த கவலையும் இல்லை. சட்டப்பேரவை தேர்தலில் திமுக கூட்டணி கட்சியினருக்கு தமிழக மக்கள் சரியான பாடம் கற்பிப்பார்கள்" என்று கூறியுள்ளார்.

அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்ட அறிக்கையில், "தமிழகத்தில் திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த 5 ஆண்டுகளில் கொலை, கொள்ளை, பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் என உச்சத்தில் இருக்கும் சட்டம் ஒழுங்கு சீர்கேட்டோடு பயங்கரவாதிகள் மற்றும் அவர்களுக்கு ஆதரவானவர்களின் நடமாட்டமும் அதிகரித்திருப்பது மக்கள் பாதுகாப்பில் திமுக தோல்வி அடைந்திருப்பதையே வெளிப்படுத்துகிறது.

கடந்த 2022ம் ஆண்டு கோவையில் நடைபெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தை சிலிண்டர் வெடிப்பு சம்பவமாகத் திசைதிருப்பிய திமுக அரசு, தற்போது இச்சம்பவத்தை என்ன சொல்லி சமாளிக்கப் போகிறது?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

## சென்னை பெரம்பூரில் விஜய் போட்டியிட தவெக தீர்மானம்!

சென்னை, பிப்.23-

எதிர்வரும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் சென்னையில் உள்ள பெரம்பூர் தொகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் போட்டியிட வேண்டும் என்று சென்னையில் நடைபெற்ற அக்கட்சி நிர்வாகிகள் பங்கேற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதில் பேசிய தவெக தேர்தல் பிரச்சார மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா கூறியதாவது: "சென்னை துறைமுகம் பகுதியில் நாம் அமைதியான முறையில் பிரச்சாரம் மேற்கொண்டோம். வீடு வீடாக அந்த பிரச்சாரப் பணி நடைபெற்றது. அப்போது நமது கர்ப்பிணி சகோதரி ஒருவரின் வயிற்றில் கை வைத்தார்கள். அப்போதே நம் தலைவர் முடிவு செய்து விட்டார், நாம் முதலில் இறங்க வேண்டியது வடசென்னையில்தான் என்று.



வடசென்னை மீது ஒரு தவறான கண்ணோட்டத்தை திமுக உருவாக்கி வைத்துள்ளது. இங்குள்ள மக்கள் அன்பானவர்கள். அனைவரும் உழைப்பாளிகள். அதை நாம் அறிவோம். இந்த நேரத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என கருதுகிறேன்.

வடசென்னையை வளர்ச்சி பாதைக்கு நம் தலைவர் அழைத்துச் செல்வார். வளர்ச்சியை மட்டுமே அவர் உருவாக்குவார். நிச்சயம் அவரது மனம் வடசென்னையை நோக்கிதான் உள்ளது என நான் கணிக்கிறேன். \

ஏனென்றால், வட சென்னையை இந்த 50 முதல் 60 ஆண்டுகளாக 'ஒதுக்கி, ஒதுக்கி' வைத்த திமுகவின் சூழ்ச்சியை தூக்கி அடிக்கும் திறன் கொண்ட ஒரே தலைவர் நம் தலைவர்தான். சென்னை பெரம்பூர் தொகுதியில் நம் தலைவர் போட்டியிட வேண்டும் என தீர்மானத்தை இந்த கூட்டத்தில் முன்மொழிகிறேன். இதை பொதுச்செயலாளர் வழிமொழிய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் 234 தொகுதிகளில் தவெக வேட்பாளராக யார் போட்டியிட்டாலும் சரி, அது நம் தலைவர்தான் என நாம் கருத வேண்டும். ஏனெனில், நம் தலைவரை முதல்வராக பொறுப்பேற்க செய்ய வேண்டும். சென்னையில் உள்ள அனைத்து தொகுதிகளையும் நாம் வெல்ல வேண்டும். சென்னை, திமுகவின் கோட்டை என்று சொல்கிறார்கள். அதை நாம் உடைக்க வேண்டும்" என்றார்.

தொடர்ந்து ஆனந்த் பேசுகையில், "ஆதவ் முன்வைத்த தீர்மானத்தை நாங்கள் எல்லாரும் மனதார ஏற்றுக்கொள்கிறோம். உங்களுடைய விருப்பத்தை தளபதியிடம் சொல்வோம்." என்றார்.

## "ஏஐ உச்சி மாநாட்டில் காங்கிரஸ் கட்சி செய்தது கண்ணியமற்ற அரசியல்" : பிரதமர் மோடி தாக்கு

டெல்லி, பிப்.23-

டெல்லி ஏஐ உச்சி மாநாட்டில் ஆடையை களைந்து காங்கிரஸ் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டது குறித்து உத்தரப் பிரதேச மாநிலம் மீரட் நகரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பங்கேற்ற பிரதமர் நரேந்திர மோடி கடுமையாக விமர்சித்துள்ளார்.

இந்த நிகழ்வில், ரூ.12,930 கோடி மதிப்பிலான பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார். முன்னதாக, நமோ பாரத் ஆர்ஆர்டிஎஸ் ரயில் மற்றும் மீரட் மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் மோடி தொடங்கி வைத்திருந்தார்.

அதன் பின்னர் பொதுக் கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியது: "இந்தியாவில் நடைபெற்ற சர்வதேச நிகழ்வு ஒன்றில் காங்கிரஸ் கட்சி கண்ணியமற்ற அரசியலை அரங்கேற்றும் அரங்கமாக பயன்படுத்தியது. வெளிநாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் முன்பாக ஆடையை காங்கிரஸ் கட்சியினர் களைந்து நின்றனர்.



நீங்கள் அப்படித்தான் என்று தேசம் மக்கள் அறிவார்கள். அப்படி இருக்கும்போது ஏன் உங்களது ஆடையை களைய வேண்டும்? இதை நான் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

இந்தியாவை அவமதித்த காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்களின் இத்தகைய செயலுக்கு அக்கட்சியின் தலைவர்கள் வருத்தம் தெரிவித்திருக்க வேண்டும். ஆனால், அதற்கு நேர்மாறாக உள்ளது நிலைமை. இந்தச் செயலுக்கு பிறகு காங்கிரஸ் கட்சியின் கூட்டணி கட்சியினர் அவர்களை விட்டு சற்று விலகி உள்ளனர்.

நீங்கள் பிரதமர் அரியணையில் அமர வேண்டுமென்றால் மக்களின் நம்பிக்கையை முதலில் பெற வேண்டும். இன்று வளர்ந்த நாடுகள் இந்தியாவுடன் இணைந்து பயணிக்க ஆர்வம் காட்டி வருகின்றன. இந்தியாவின் வளர்ச்சியில் தங்களின் எதிர்காலத்தை அவர்கள் பார்க்கிறார்கள். 21ம் நூற்றாண்டில் எதிர்கொள்ளும் சவாலுக்கு இந்தியா தீர்வு தரும் என உலகம் கருதுகிறது.

முன்னொரு காலத்தில் காங்கிரஸ் ஆட்சியில் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பந்தம் மேற்கொள்ள விருப்பம் இருந்தும், அது நடக்காத ஒன்றாக இருந்தது. ஆனால், பாஜக ஆட்சியில் தேசத்தின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது" என்றார் பிரதமர் மோடி.

ஆடையை களைந்து போராட்டம்: டெல்லி ஏஐ உச்சி மாநாட்டில் கடந்த 20ம் தேதி அன்று இளைஞர் காங்கிரஸை சேர்ந்த சிலர் அரங்கம் 5ல் திடீரென நுழைந்தனர். பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க அதிபர் ட்ரம்ப் புகைப்படங்கள் அச்சிடப்பட்ட டி சர்ட்களை அவர்கள் அணிந்திருந்தனர். அந்த டி சர்ட்களில், இந்திய, அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம், எப்ஸ்டீன் பைல் உள்ளிட்ட வாசகங்கள் இருந்தன.

திடீரென இளைஞர் காங்கிரஸ் தொண்டர்கள் டி சர்ட்டை களைந்து பிரதமர் மோடிக்கு எதிராகவும் இந்திய, அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்துக்கு எதிராகவும் கோஷமிட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட காங்கிரஸ் தொண்டர்களை டெல்லி போலீஸார் கைது செய்து அங்கிருந்து அப்புறப்படுத்தினர். பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். போராட்டத்தை முன்னின்று நடத்திய 4 பேரிடம் மட்டும் விசாரணை நடைபெற்றது. இந்நிலையில், இளைஞர் காங்கிரஸ் தொண்டர்கள் 4 பேரை 5 நாள் போலீஸ் காவலில் விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

## கொடைக்கானலில் வெகுவாக குறைந்த சுற்றுலா பயணிகளின் வருகை

**திண்டுக்கல், பிப்.23–**

கொடைக்கானலுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை வெகுவாக குறையத் துவங்கியுள்ளதால் சுற்றுலாத் தலங்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள மலைகளின் இளவரசியான கொடைக்கானலுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை கோடை சீசன் மாதங்களில் மட்டும் இருந்து வந்தது. பின்னர் வார விடுமுறை தினங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்தது. தற்போது ஆண்டுதோறும் சுற்றுலாப் பயணிகளின் வருகை காணப்படுகிறது.

கோடை சீசன், ஆஃப் சீசன், வார விடுமுறை தினங்களில் மலைச் சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் அளவுக்கு சுற்றுலாபயணிகளின் வாகனங்கள் கொடைக்கானலுக்கு வந்து செல்லும். அதிக மழைப் பொழிவு காலத்தில் சுற்றுலா பயணிகள் வருகை வெகுவாக குறைந்து காணப்படும்.

இந்நிலையில், கடந்த சில தினங்களாக கொடைக்கானலுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை வெகுவாக குறைந்து காணப்படுகிறது. இன்னும் ஒரு வாரத்தில் பிளஸ் 2, அதைத் தொடர்ந்து 10ம் வகுப்பு பொதுத் தேர்வுகள் தொடங்கவுள்ளன.

மேலும், கோடை சீசனுக்கு இன்னும் ஒரு மாதமே உள்ளதால் கோடை சீசனை அனுபவிக்க சுற்றுலாப் பயணிகள் தங்கள் பயணத்தை தள்ளிப் போட்டிருக்கலாம் என்பதால் கடந்த சில தினங்களாக கொடைக்கானல் சுற்றுலாத் தலங்களில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து காணப்படுகிறது.

சாலைகளில் சுற்றுலா வாகனங்களும் அதிகம் காணப்படாததால் ஏரிச்சாலை உள்ளிட்ட பகுதிகள் வெறிச்சோடி காணப்படுகின்றன. ஏப்ரல் மாதம் கோடை சீசன் துவங்கும்போது சுற்றுலாப் பயணிகள் வருகை வழக்கம்போல் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்கின்றனர் சுற்றுலாவை நம்பி வியாபாரம் செய்பவர்கள்.

# திமுகவிடம் 5 தொகுதிகள் கேட்டுள்ளோம் ஐயுஎம்எல் தலைவர் காதர் மொகிதீன்



சென்னை, பிப்.23-
எதிர்வரும் தமிழக சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு திமுக, தனது கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீடு சார்ந்த பேச்சுவார்த்தையை தொடங்கியுள்ளது. இன்று தொடங்கிய இந்த பேச்சுவார்த்தையில் முதல் கட்சியாக இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சி பங்கேற்றது. அப்போது திமுகவிடம் ஐந்து தொகுதிகளை கேட்டுள்ளதாக அக்கட்சியின் தலைவர் காதர் மொகிதீன் தெரிவித்தார்.

திமுகவின் மரபின்படி இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சிக்கு முதல் அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த பேச்சுவார்த்தையில் திமுக தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை குழுவை சேர்ந்த டி.ஆர்.பாலு, கே.என்.நேரு, திருச்சி சிவா, ஆ.ராசா, ஆர்.எஸ்.பாரதி, எ.வ.வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பங்கேற்றனர். ஐயுஎம்எல் சார்பில் அக்கட்சியின் தலைவர் காதர் மொகிதீன் மற்றும் முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர்.

தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தைக்கு பின்னர் செய்தியாளர்களை காதர் மொகிதீன் சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது: "திமுக கூட்டணியை பலமடைய செய்யும் வகையில் சில புதிய கட்சிகள் கூட்டணியில் இணைந்துள்ளன. நாங்கள் ஐந்து தொகுதிகளை திமுகவிடம் கேட்டோம்.

புதிய கட்சிகள் கூட்டணியில் இணைந்துள்ள காரணத்தால் தொகுதிகளை விட்டுக்கொடுக்க வேண்டும் என திமுக தெரிவித்தது. இதையடுத்து 5 தொகுதிகள் இல்லையென்றால் 4 தொகுதிகளாவது கொடுத்தால் நன்றாக இருக்கும் என தெரிவித்துள்ளோம்" என்றார்.

தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தபோது, அவர் மயக்கமடைந்தார். அவருடன் இருந்தவர்கள் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்க அண்ணா அறிவாலயத்துக்குள் அழைத்து சென்றனர். ரம்ஜான் மாதத்தையொட்டி முஸ்லிம்கள் நோன்பு கடைப்பிடித்து வருகின்றனர். அதன் காரணமாக அவர் மயக்கமடைந்து இருக்கலாம் எனத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

மதிமுக, மனிதநேய மக்கள் கட்சி உடன் திமுக தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை நடத்த உள்ளது. பிப்.26, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மற்றும் பிப்.27 இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உடன் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. திமுக கூட்டணியில் விசிக, காங்கிரஸ், தேமுதிக உள்ளிட்ட கட்சிகள் உள்ளன.

# 'மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படுவதே முன்னேற்றத்துக்கு உறுதுணை' சி.பி.ஆர்



சிவகங்கை, பிப்.23-
மத்திய, மாநில அரசுகள் எப்போதும் இணைந்து செயல்படுவது தான் ஒரு பகுதி முன்னேற்றத்துக்கு உறுதுணையாக இருக்கும் என குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே திருக்கோஷ்டியூரில் பிரசித்தி பெற்ற சவுமிய நாராயணப் பெருமாள் கோயில் உள்ளது. இக்கோயில் தங்கக் கோபுர கும்பாபிஷேகம் பிப். 6ம் தேதி நடைபெற்றது. இதற்கு குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு அழைப்பிதழ் கொடுக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து இன்று அக்கோயிலுக்கு சி.பி.ராதாகிருஷ்ணன் வந்தார். இதற்காக அவர் மதுரையிலிருந்து ஹெலிகாப்டரில் திருப்பத்தூர் வந்தார். அவரை கார்த்திசிதம்பரம் எம்பி, மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வரவெற்றனர்.

அங்கிருந்து காரில் திருக்கோஷ்டியூர் சவுமியநாராயண பெருமாள் கோயிலுக்கு வந்தார். தொடர்ந்து சுவாமி தரிசனம் செய்தார். பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், மாவட்டத் தலைவர் பாண்டித்துரை ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர், காரில் சிவகங்கை அரண்மனைக்கு வந்த அவரை சமஸ்தானம் தேவஸ்தான பரம்பரை அறங்காவலர் மதுராந்தகி நாச்சியார், சமஸ்தான மகேஸ்துரை, இலங்கை முன்னாள் அமைச்சர் செந்தில்தொண்டமான் உள்ளிட்டோர் வரவேற்றார்.

பின்னர் சி.பி.ராதாகிருஷ்ணன் அரண்மனை வளாகத்தில் இருந்த மன்னர் சசிவர்ணதேவர், ராணி வேலுநாச்சியார் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அரண்மனை பொருட்களையும் பார்வையிட்டார்.

தொடர்ந்து சி.பி.ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ராணி வேலுநாச்சியார் மட்டும் தான் இழந்த அரசை போர் புரிந்து மீண்டும் கைப்பற்றியவர். வீரம் விளைந்த மண் சிவகங்கை. மகத்தான சரித்திரத்துக்கு சொந்தமானது. மத்திய, மாநில அரசுகள் எப்போதும் இணைந்து செயல்படுவது தான் ஒரு பகுதி முன்னேற்றத்துக்கு உறுதுணையாக இருக்கும்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் 50 சதவீதம் வரி விதித்திருந்தார். அதை 18 சதவீதமாக குறைத்துள்ளனர். நிச்சயமாக இது இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து காவி உடைந்து அணிந்து சிலைகளுக்கு மரியாதை செலுத்தியுள்ளீர்களே, அதில் எதுவும் விஷேசம் உண்டா? என்று செய்தியாளர்கள் கேட்டனர். அதற்கு, நீங்கள் கூட வயது முதிர்வு அடைந்தால் காவி உடைக்கு மாறி விடுவீர்கள், என்று நகைச்சுவையாக தெரிவித்தார்.

குடியரசு துணைத் தலைவர் வருகையையொட்டி, சிவகங்கை அரண்மனைவாசலில் இருந்த கடைகள் அடைக்கப்பட்டு போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டது. நிகழ்ச்சிகள் முடிந்ததும் அரண்மனையிலிருந்து சி.பி.ராதாகிருஷ்ணன் காரில் வெளியே வந்தார்.

அப்போது தடையை மீறி அதிக ஒலி எழுப்பிக் கொண்டே இருசக்கர வாகனத்தில் ஒருவர் வந்தார். பாதுகாப்பு பணியிலிருந்த போலீஸார் அவரை வாகனத்துடன் மடக்கி பிடித்தனர். விசாரணையில், அவர் காளையார்கோவில் அருகே சிலுக்கப்பட்டியைச் சேர்ந்த முன்னாள் ஊராட்சித் தலைவர் கருணாகரன் (45) என்பதும், குடியரசு துணைத் தலைவர் வாகனம் செல்வதை அறியாமல் வந்ததும் தெரியவந்தது. இதையடுத்து அவரை போலீஸார் எச்சரித்து அனுப்பி வைத்தனர். குடியரசு துணைத் தலைவர் சென்றதும் கடைகள் திறக்கப்பட்டன.

# செங்கோட்டையில் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டம்: உளவுத் துறை எச்சரிக்கை



புதுடெல்லி, பிப்.23-
டெல்லி செங்கோட்டை, முக்கிய வழிபாட்டுத் தலங்களில் தாக்குதல் நடத்த லஷ்கர் தீவிரவாத அமைப்பு திட்டமிட்டுள்ளதாக உளவுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

டெல்லி செங்கோட்டை, சாந்தினி சவுக்கில் ஒரு கோயில் உட்பட நாடு முழுவதும் முக்கிய வழிபாட்டுத் தலங்களிலும் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக உளவுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தானைச் சேர்ந்த லஷ்கர் தீவிரவாத அமைப்பு, தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக உளவுத்துறை எச்சரித்துள்ளது. இதையடுத்து, டெல்லி செங்கோட்டை, பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள், நாடு முழுவதும் உள்ள முக்கிய வழிபாட்டுத் தலங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த பிப்ரவரி 6ம் தேதி பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் மசூதி ஒன்றில் நிகழ்த்தப்பட்ட தற்கொலைப் படைத் தாக்குதலில் 31 பேர் உயிரிழந்தனர். இதக்கு ஐஎஸ் தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றது. எனினும், இந்தத் தாக்குதலுக்கு பழிவாங்கும் நோக்கில் லஷ்கர் இதொய்பா அமைப்பு இந்தியாவில் தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டி இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2025, நவம்பர் 10ம் தேதி டெல்லி செங்கோட்டை அருகே நிகழ்ந்த கார் குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்தத் தாக்குதலில் 12 பேர் உயிரிழந்தனர். மேலும் சுமார் 24 பேர் காயமடைந்தனர்.

இது தொடர்பான வழக்கை என்ஐஏ விசாரித்து வருகிறது. டீஎன்ஏ பரிசோதனை முடிவுகளின்படி, ஃபரிதாபாத்தில் உள்ள அல்ஃபலா பல்கலைக்கழக மருத்துவர் உமர் முகமது என்பவர் அந்தக் காரை ஓட்டிச் சென்றதும் அவர் உயிரிழந்ததும் உறுதி செய்யப்பட்டது.



# ஜார்க்கண்டில் ஒரு காட்டு யானையால் 23 பேர் உயிரிழப்பு: தமிழ்நாட்டு கும்கிகளை வரவழைக்க முடிவு

புதுடெல்லி, பிப்.23-
வனப்பிரதேசம் நிறைந்த ஜார்க்கண்டில் யானைகள் நடமாட்டம் அதிகம் உள்ளது. மேற்கு சிங்பும் மாவட்டத்தில் ஒரு முரட்டு யானை 2 வாரங்களில் 23 பேரை கொன்றுள்ளது.

இந்த விவகாரம் நேற்று ஜார்க்கண்ட் சட்டப்பேரவையில் எழுப்பப்பட்டது. இதில் காங்கிரஸ் எம்எல்ஏ ராமேஸ்வர் ஓரான் பேசுகையில், "யானைகளின் அச்சுறுத்தலை சமாளிக்க அரசு கொள்கையில் மாற்றம் கொண்டு வர வேண்டும். யானை மற்றும் மனித மோதலைக் குறைக்க பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். காட்டு யானையால் ஏற்படும் உயிரிழப்புக்கு ரூ.4 லட்சம் வழங்கப்படுகிறது. இதை, ஒடிசா போன்று ரூ.6 லட்சமாக உயர்த்த வேண்டும்" என்றார்.

இதற்கு முதல்வர் ஹேமந்த் சோரன் பேசுகையில் "ஜார்க்கண்டில் யானை மனித மோதல் கடுமையான சமூக மற்றும் சுற்றுச்சூழல் நெருக்கடியாக மாறியுள்ளது. யானை நடத்தையில் ஏற்படும் மாற்றத்துக்கு சுற்றுச்சூழல் மாற்றங்கள் ஒரு முக்கிய காரணமாக உள்ளது. அரசு முழு பிரச்சினையையும் கவனித்து வருகிறது.

மாநிலத்தில் பயிற்சி பெற்ற மீட்புக் குழு தற்போது இல்லை. இந்தக் குறை விரைவில் தீர்க்கப்படும். தமிழ்நாட்டில் இருந்து 6 கும்கி யானைகள் அழைத்து வரப்பட உள்ளன. இவை முரட்டு காட்டு யானைகளை கட்டுப்படுத்த பயன்படுத்தப்படும்" என்றார்.

# சபரிமலை தங்கம் திருட்டு வழக்கு: தந்திரிக்கு எதிராக சாட்சியமில்லை நீதிமன்றம் தகவல்

கொல்லம், பிப்.23-
கேரள மாநிலம் சபரிமலை ஐயப்பன் கோயில் தங்கம் கொள்ளை தொடர்பான 2 வழக்குகளில் கோயில் தந்திரியான கண்டரரு ராஜீவரு திருவனந்தபுரம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில், ராஜீவருவின் ஜாமீன் மனு மீதான விசாரணை கொல்லம் குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்றது. மனுவை விசாரித்த நீதிமன்றம் அவருக்கு ஜாமீன் வழங்கியது. விசாரணையின்போது நீதிமன்றத்தில் தந்திரியின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், "உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி 2018ல் சபரிமலை ஐயப்பன் கோயிலில் பெண்கள் நுழைந்து தரிசனம் செய்ய கேரள மாநில அரசு அனுமதித்தது.

இதற்கு அப்போது கண்டரரு ராஜீவரு கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.அதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக இந்த தங்கத் திருட்டு வழக்கை கேரள அரசு அதிகாரிகள் தொடர்ந்துள்ளனர்" என்று தெரிவித்தார். இந்நிலையில்தான் ஜாமீனில் ராஜீவரு வெளியே வந்துள்ளார்.

மேலும் இந்த வழக்கில் கண்டரரு ராஜீவருக்கு எதிராக எந்தச் சாட்சியமும் இல்லை என்று கொல்லம் குற்றவியல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இது கேரள அரசியலில் பெரும் புயலைக் கிளப்பியுள்ளது.

கண்டரரு ராஜீவருவை வேண்டுமென்றே கேரள போலீஸார் கைது செய்து விசாரணை நடத்தியதாகவும், இது பழி வாங்கும் நடவடிக்கை என்றும் கேரளாவில் உள்ள எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

இந்த தங்கத் திருட்டு வழக்கில் முன்னாள் தேவஸ்வம் போர்டு அமைச்சர் கடகம்பள்ளி சுரேந்திரன் சம்பந்தப்பட்டுள்ளார் என்றும், அதை திசை திருப்பவே தந்திரி கண்டரரு ராஜீவருவை கேரள போலீஸார் கைது செய்துள்ளனர் என்றும் பாஜக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன. கண்டரரு ராஜீவருவை கைது செய்தது தொடர்பாக கேரள அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் அக்கட்சிகள் போர்க்கொடி தூக்கியுள்ளன.

# மேலாடையை களைந்து போராட்டம்: 4 பேருக்கு 5 நாள் போலீஸ் காவல்




புதுடெல்லி, பிப்.23-
டெல்லி ஏஐ மாநாட்டில் மேலாடையை களைந்து போராட்டம் நடத்திய இளைஞர் காங்கிரஸ் தொண்டர்கள் 4 பேரை 5 நாள் போலீஸ் காவலில் விசாரிக்க நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது. ஏஐ மாநாட்டு அரங்கில் பிரதமர் மோடி மற்றும் அமெரிக்க வர்த்தக உடன்பாட்டுக்கு எதிராக அவர்கள் முழக்கமிட்டனர். கைது செய்யப்பட்ட 4 பேரும் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர். சர்வதேச அளவில் நாட்டை அவமதிக்கும் ஆழமான சதி உள்ளதால் அவர்களை விசாரிக்க 5 நாட்கள் அனுமதிக்க வேண்டும் என்று போலீஸார் கோரினர். அதை ஏற்ற நீதிமன்றம் 4 பேரையும் போலீஸ் காவலில் விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

# வானிலை முன்னறிவிப்பு: மதுரை, திண்டுக்கல்லில் நாளை கனமழைக்கு வாய்ப்பு



சென்னை, பிப்.23-
இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்தத் தாழ்வுப்பகுதி, இன்று காலை ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப்பகுதியாக வலுவடைந்தது. இதன்காரணமாக, தென் தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மிதமான மழையும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து, சென்னை வானிலை ஆய்வு மையத்தின் உயரதிகாரியும், விஞ்ஞானியுமான வி. ஆர். துரை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கடந்த 24 மணி நேரத்தில், தென் கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் மழை பெய்துள்ளது.

இன்று காலை 8 மணி நிலவரப்படி, திருநெல்வேலி மாவட்டம் நம்பியாறு அணை, தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை, கன்னியாகுமரி மாவட்டம் பெருஞ்சாணி அணையில் தலா 5 செ.மீ., கன்னியாகுமரி புத்தன் அணையில் 4 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

வலுவடைந்தது காற்றழுத்தத்தாழ்வு பகுதி:

இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் சனிக்கிழமை நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி, மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை காலை ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப்பகுதியாக வலுவடைந்து, அதே பகுதிகளில் நிலவுகிறது. இது மேலும் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் மேற்குவடமேற்கு திசை நகரும். பிறகு, வடகிழக்கு திசையிலும் நகரக்கூடும்.

இதுதவிர, தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக, நாளை (பிப்.22) தென் தமிழகத்தில் ஒருசில இடங்களில் மிதமான மழையும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழையும் பெய்யக்கூடும். மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும்.

பிப்.23, 24 ஆகிய தேதிகளில், மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும்.

பிப்.25ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். பிப்.26ம் தேதி தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

பனிமூட்டம் பற்றிய முன்னறிவிப்பு:

பிப்.23,24 ஆகிய தேதிகளில் சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம் ஆகிய 9 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

சென்னையில்...: சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்றும், நாளையும் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை:

மன்னார்வளைகுடா மற்றும் அதை ஒட்டிய தென் தமிழக கடலோரப்பகுதிகள், குமரிக்கடல் பகுதிகள், தென்மேற்கு வங்கக்கடலின் அநேக பகுதிகள் மற்றும் அதை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகள், கேரளா கடலோரப்பகுதிகள், லட்சத்தீவு பகுதிகளில் இன்றும், நாளையும் பலத்த சூறாவளி காற்று வீசும். இதுதவிர, பிப்.24ம் தேதி தெற்கு வங்கக்கடலின் மையப்பகுதிகள் மற்றும் அதை ஒட்டிய மத்திய வங்கக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசும். எனவே, இப்பகுதிகளுக்கு மீனவர்கள் மேற்படி நாட்களில் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# ரூ.5 லட்சம் லஞ்சம் வாங்கிய கர்நாடக பாஜக எம்எல்ஏ கைது



பெங்களூரு, பிப்.23-
கர்நாடகாவின் கதக் மாவட்டம் ஷிரஹட்டி தொகுதி பாஜக எம்எல்ஏ டாக்டர் சந்துரு லமானி. இவர் கட்டிட ஒப்பந்ததாரர் விஜய் பூஜார் என்பவரிடம் நீர்ப் பாசன திட்டம் ஒன்றின் அனுமதியை பெற்று தருவதற்கு ரூ.11 லட்சம் லஞ்சம் கேட்டுள்ளார்.

இதுகுறித்து விஜய் பூஜார் லோக் ஆயுக்தா போலீஸில் புகார் அளித்தார். அவர்கள் கூறிய அறிவுரையின்படி நேற்று பிற்பகல் 2 மணிக்கு விஜய் பூஜார், பாஜக எம்எல்ஏ சந்துரு லமானிக்கு சொந்தமான பாலாஜி மருத்துவமனையில் ரூ.5 லட்சம் பணத்தை வழங்கினார்.

அப்போது லோக் ஆயுக்தா போலீஸார் மருத்துவமனைக்குள் நுழைந்து அவர்களிடம் இருந்து பணத்தை கைப்பற்றினர். இதையடுத்து, சந்துரு லமானி, அவரது உதவியாளர்கள் மஞ்சுநாத் வால்மீகி, குரு நாயக் ஆகிய 3 பேரையும் போலீஸார் கைது செய்தனர்.

# சின்னாளபட்டியில் 141 ஆண்டுகாலப் பாரம்பரியம் ஞாபக சக்தி தரும் காமன் கதைகளைக் கேட்கும் மாணவர்கள்

திண்டுக்கல், பிப்.23-

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டியில் 141 ஆண்டுகளாக அனைத்து சமுதாய மக்களும் ஒன்றிணைந்து கொண்டாடும் காமன்கோவில் திருவிழா கடந்த புதன்கிழமை தொடங்கி வெகு விமர்சையாக நடைபெற்று வருகிறது.



முனியப்ப சுவாமி கோவிலின் உப கோவிலான ஸ்ரீ காமயசுவாமிக்கு நடைபெறும் இந்த விழாவில், சுவாமிக்கு செய்யப்படும் அலங்காரம் மிகவும் வினோதமானது. கரும்பு, அரச இலை, மா இலை, கொட்டமுத்து இலை மற்றும் பல்வேறு வண்ண மலர்களைக் கொண்டு சுவாமிக்குத் தினசரி சிறப்பு அலங்காரங்கள் செய்யப்பட்டு பூஜைகள் நடைபெறுகின்றன.

விழாவின் தொடக்கமாக, பிருந்தாவனத் தோப்பில் வானில் மூன்றாம் பிறை பார்த்த பின்பு, ஸ்ரீ ராமஅழகர் சுவாமிக்கு (லெட்சுமி நரசிம்மர்) சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டன. அதனைத் தொடர்ந்து, காமயசுவாமியைப் பூசாரி எம். பால்பாண்டி சுமந்து வர, மேளதாளங்கள் முழங்க ஊர்வலம் நடைபெற்றது. பூஞ்சோலை மற்றும் பேருந்து நிலையம் வழியாக ஊர்வலம் கோவிலைச் சென்றடைந்தது.

*மாணவர்களை ஈர்க்கும் காமன் கதைகள்:*

தினசரி கோவிலில் காமன் கதைகள் வாசிக்கப்படுகின்றன. இந்த கதைகளைக் கேட்டால் ஞாபக சக்தி பெருகும் என்ற நம்பிக்கையில், நூற்றுக்கணக்கான பள்ளி மாணவர்கள் தினமும் ஆர்வத்துடன் வந்து கதைகளைக் கேட்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை தலைவர் சிவமுருகேசன், செயலாளர் கிருஷ்ணவேல்ராஜா, பொருளாளர் சுப்பையா, உதவி தலைவர்கள் மார்க்கம்பட்டி முருகன், பி.ராகவன், உதவி செயலாளர்கள் ஆர்.தியாகராஜன், எம்.பிரசன்னா, ஏ.அழகேசன், ஜெ.ராம்குமார், எஸ்.வினோத்சாரதி, தலைமையிலான விழாக் கமிட்டியாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.





# கொடைக்கானலில் அதிரடி தெருமுனைப் பிரச்சாரம் திரண்ட NDA கூட்டணிக் கட்சிகள் திமுக அரசை கண்டித்து முழக்கம்

திண்டுக்கல், பிப்.23-

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வட்டத்தில் உள்ள சீனிவாசபுரம், நாயுடுபுரம் மற்றும் புதுக்காடு ஆகிய பகுதிகளில் பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் எழுச்சிகரமான தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெற்றன.

*NDA கூட்டணிக் கட்சிகள் சங்கமம்:*

பாஜக சார்பில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணியைச் சேர்ந்த பல்வேறு கட்சி நிர்வாகிகள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு தங்களது பலத்தை நிரூபித்தனர். குறிப்பாக அஇஅதிமுக நகர செயலாளர் மா. ஸ்ரீதர் மற்றும் நிர்வாகிகள், பாமக நகர செயலாளர் கோபி மற்றும் நிர்வாகிகள், அமமுக நகர செயலாளர் சக்திவேல் மற்றும் நிர்வாகிகள், ஐ.ஜே.கே மற்றும் தமிழ் தேசிய பார்வர்டு பிளாக் கட்சி நிர்வாகிகள்.

*தலைமை மற்றும் ஒருங்கிணைப்பு:*

இந்தக் கூட்டத்திற்கு பாரதிய ஜனதா கட்சியின் திண்டுக்கல் மேற்கு மாவட்டத் துணைத் தலைவர் மருத்துவர் மதன்குமார் தலைமை தாங்கினார். நகரத் தலைவர் சரவணன் முன்னிலை வகித்தார். நகரப் பொதுச் செயலாளர் மணிவாசவன் அனைத்து சக்தி கேந்திர பொறுப்பாளர்களையும் ஒன்றிணைத்து கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தார்.

*திமுக அரசுக்கு எதிராகக் கண்டனம்:*

பிரச்சாரத்தின் போது, திமுக அரசின் மக்கள் விரோதப் போக்கைக் கண்டித்தும், தேர்தல் நேரத்தில் அளிக்கப்பட்ட நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளைச் சுட்டிக்காட்டியும் ஆவேசமாக முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இதில் பாஜகவின் கிளைச் செயலாளர்கள், சக்தி கேந்திர பொறுப்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சித் தொண்டர்கள் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர்.



■ மதுரை எல்லீஸ்நகர் மாணிக்கம் மகாலில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் நடைபெற்ற, கர்ப்பிணிப் பெண்களுக்கான சமுதாய வளைகாப்பு விழாவை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, வளைகாப்பு சீர்வரிசைகளை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் வழங்கினார்.

# ஏப்.1 முதல் சுங்கச்சாவடிகளில் பணமாக செலுத்த முடியாது

புதுடெல்லி, பிப்.23-

தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சுங்கச்சாவடிகளில் வாகன ஓட்டிகள் ரொக்கப் பணம், ஃபாஸ்டேக் போன்ற முறையில் கட்டணத்தை செலுத்தி வருகின்றனர். இனிமேல் பயணிகள் சுங்கச்சாவடிகளில் ஃபாஸ்டேக் அல்லது யு.பி.ஐ. போன்ற டிஜிட்டல் முறைகளை மட்டுமே பயன்படுத்த முடியும். இந்தத் திட்டம் வரும் ஏப்ரல் 1ம் தேதி முதல் இது அமலுக்கு வரும் என தெரிகிறது.

தற்போது 98 சதவீதத்துக்கும் அதிகமான வாகன ஓட்டிகள் ஃபாஸ்டேக் முறையைப் பயன்படுத்தினாலும், ஒரு சில வாகன ஓட்டிகள் இன்னும் சுங்கக்கட்டணத்தைப் பணமாக வே செலுத்துகின்றனர். இதனால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.எனவே, முழுமையான டிஜிட்டல் பரிவா[illegible]த்தனை முறையை அமல்படுத்த தேசிய நெடுஞ்சாலை ஆணையம் முடிவெடுத்துள்ளது..

# 10 ஆண்டுகளாக சிறுவர்களை சீரழித்து 2 லட்சம் ஆபாச வீடியோக்களை விற்ற உ.பி. தம்பதிக்கு மரண தண்டனை

பண்டா, பிப்.23-

உத்தர பிரதேச மாநிலத்தின் நீர்வளத் துறையில் இளநிலை பொறியாளராகப் பணியாற்றியவர் ராம் பவன். இவரது மனைவி துர்காவதி. இருவரும் பண்டா மற்றும் சித்ரகூடம் பகுதியில் கடந்த 2010ம் ஆண்டு முதல் 2020ம் ஆண்டு வரையில் சிறிய அறையை வாடகைக்கு எடுத்து தங்கி வந்துள்ளனர்.



அந்த 10 ஆண்டுகளில் சிறுவர்களை தங்கள் வீட்டுக்கு அழைத்து வீடியோ கேம் விளையாட வைப்பது, அவர்களுக்கு சாக்லேட்டுகள் வழங்குவது, பரிசு வழங்குவது என பழக்கப்படுத்தி உள்ளனர்.

பின்னர் சிறுவர்களை ஆபாச படம் எடுத்துள்ளனர். இதுபோல் 33 சிறுவர்களை ராம்பவன் மற்றும் துர்காவதி இருவரும் ஆபாச படம் எடுத்து 40க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு விற்பனை செய்து வந்துள்ளனர். ஒரு கட்டத்தில் இவர்களுடைய சட்ட விரோத செயல்கள் வெளியில் தெரிய வந்தது.

போலீஸார் உடனடியாக களத்தில் இறங்கி விசாரணை நடத்தினர். அப்போது, அவர்கள் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட ஆபாச வீடியோக்கள் எடுத்ததும், அதில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் 18 வயதுக்கு குறைவானவர்கள் என்பதும் சிலர் 3 வயதுக்குட்பட்டவர்கள் என்பதும் தெரிய வந்தது.

இதுதொடர்பாக அவர்கள் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. சிபிஐ அதிகாரிகளும் தீவிர விசாரணை நடத்தி வந்தனர். இந்த வழக்கு சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

அப்போது ராம் பவன் வீட்டில் சோதனை நடத்திய போது கைப்பற்றப்பட்ட வீடியோக்கள், ஆதாரங்கள், ரொக்கப்பணம் போன்றவற்றை விசாரணை குழுவினர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர். இந்த வழக்கில் பண்டா மாவட்ட சிறப்பு நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை 163 பக்கத்தில் தீர்ப்பளித்தது.

இந்த வழக்கு அரிதிலும் அரிதானது என்று மாவட்ட கூடுதல் செஷன்ஸ் நீதிமன்ற நீதிபதி பிரதீப் குமார் மிஸ்ரா தெரிவித்தார். ராம் பவன் மற்றும் அவரது மனைவி துர்காவதிக்கு போக்சோ சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழ் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். அத்துடன் பாதிக்கப்பட்ட 33 சிறுவர்களுக்கும் உ.பி. அரசு தலா ரூ.10 லட்சம் நஷ்டஈடு வழங்க வேண்டும்.

அத்துடன் ராம்பவன் வீட்டில் பறிமுதல் செய்யப்பட்ட ரொக்கப் பணத்தையும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு சரி சமமாகப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று நீதிபதி மிஸ்ரா உத்தரவிட்டார்.

வழக்கு விசாரணையின் போது இந்த தம்பதி எப்படி செயல்பட்டனர் என்பதை நீதிமன்றத்தில் சிபிஐ அதிகாரிகள் ஆதாரங்களுடன் விளக்கினர். மொபைல் போன், கைக் கடிகாரம் வாங்கித் தருவதாக ஆசை காட்டி சிறுவர்களை வளைத்துள்ளனர். பின்னர் அவர்களை ஆபாச படம் எடுத்து மிரட்டி மீண்டும் மீண்டும் வரவழைத்துள்ளனர்.

டார்க் வெப் மூலம் ஆபாச வீடியோக்கள் விற்பனையாவது குறித்து இன்டர்போல் இந்திய அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்துள்ளது. இதையடுத்து, ராம் பவன் மற்றும் துர்காதேவி சிக்கினர்" என்று சிபிஐ அதிகாரிகள் தெரிவித்தனர். பாதிக்கப்பட்ட சிறுவர்களில் சிலர் இன்னும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# காப்பி அடித்ததை கண்டித்த பேராசிரியரை தாக்கிய கல்லூரி மாணவர்: கர்நாடகாவில் அதிர்ச்சி சம்பவம்

பெங்களூரு, பிப்.23-

கர்நாடகாவில் தேர்வறையில் காப்பி அடித்த மருத்துவ கல்லூரி மாணவரை பேராசிரியர் கண்டித்ததால், ஆத்திரமடைந்த மாணவர் அவரை தாக்கிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



கர்நாடக மாநிலம் கலபுர்கி மாவட்டத்தில் உள்ள குவெம்பு நகரில் டாக்டர் மலகாரெட்டி ஹோமியோபதி கல்லூரி உள்ளது. அங்கு நேற்று முன்தினம் மூன்றாம் பருவ ஹோமியோபதி தேர்வு நடைபெற்றது. தேர்வு மையத்தில் ஷஃபாஸ் கான் என்ற மாணவர் செல்போனை மறைத்து வைத்து காப்பி அடித்ததை கண்காணிப்பு பணியில் இருந்த பேராசிரியர் சிவராஜ் கண்டுபிடித்தார்.

உடனடியாக அவரது விடைத்தாளை வாங்கிய சிவராஜ், தேர்வு மையத்தில் இருந்து வெளியே செல்லுமாறு கூறினார். இதனால் கோபமடைந்த ஷஃபாஸ் கான், அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, அவரை முகத்தில் கடுமையாக தாக்கினார். அங்கிருந்த மற்ற மாணவர்கள் உடனடியாக ஷஃபாஸ் கானை பிடித்து வெளியே கொண்டு சென்றனர்.

தேர்வு மையத்தில் உள்ள சிசிடிவி கேமராவில் பதிவான இந்த காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பேராசிரியரை தாக்கிய மாணவர் ஷஃபாஸ் கான் கேரள மாநிலத்தை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

உடனடியாக இந்த சம்பவம் குறித்து அவரது பெற்றோருக்கு தெரிவிக்கப்பட்டு, கல்லூரியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார். அடுத்தடுத்த தேர்வுகளை எழுதவும் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து பேராசிரியர் சிவராஜ் போலீஸில் புகார் அளிக்க முன்வரவில்லை என தெரிகிறது. எனவே கல்லூரி நிர்வாகம் சார்பில் மாணவர் மீது நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிகிறது.

# 'திராவிட மாடல்' என்ற மாயையை மக்கள் உணர்ந்து விட்டனர்: தமிழக பாஜக

சென்னை, பிப்.23-

'திராவிடமாடல் என்ற மாயையை தமிழக மக்கள் உணர்ந்து விட்டனர்' என பாஜக மாநில செய்தி தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளி யிட்டுள்ள அறிக்கை: திமுக தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட 505 வாக்குறுதிகளில் 99 சதவீதத்தை நிறைவேற்றி விட்டதாகக் கூறிக் கொள்வது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது. உண்மையில், 345 வாக்குறுதிகள் மீது எந்த முன்னேற்றமும் இல்லை. 160 வாக்குறுதிகள் மட்டுமே அரைகுறையாகத் தொடங்கப் பட்டுள்ளன. முக்கியமான 9 வாக்குறுதிகள் முற்றிலுமாகத் தோல்வியடைந்துள்ளன.

தமிழகத்தில் வாரிசு அரசியல், சாதிய வாதம் மற்றும் வகுப்பு வாதம் ஆகியவை மாநில முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டையாக உள்ளன. குறிப்பாக, ஒவ்வொரு திட்டத்திலும் 20 சதவீதம் ஊழல் பிரீமியம் வசூலிக்கப்படுகிறது. விலைவாசி உயர்வால் சாமானிய மக்கள் நசுக்கப்பட்டுள்ளனர். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து, நிர்வாகத் திறமையின்மை நிலவுகிறது. கல்வி மற்றும் சுகாதாரம் உள்கட்டமைப்பு வசதிகள் சிதைந்து குறைந்துவிட்டது.

அவசர நிலை காலத்தில் ஸ்டாலின் சிறையில் அடைக்கப்பட்டது, சர்க்காரியா கமிஷன் மூலம் கருணாநிதியை ஊழல் வாதியாக சுட்டிக்காட்டியது போன்ற வரலாறுகளை மறந்துவிட்டு இன்று காங்கிரஸூம் திமுகவும் கைகோத்துள்ளன. இந்த 'திராவிட மாடல்' என்ற மாயையை தமிழக மக்கள் உணர்ந்துவிட்டனர். எனவே, 2026 தேர்தலில் பழனிசாமி தலைமையிலான அதிமுக பாஜக உள்ளடக்கிய தேசிய ஜனநாயகக் கூட்டணி அமோக வெற்றி பெற்று, தமிழகத்தில் 'இரட்டை எஞ்சின்' ஆட்சியை அமைக்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# போட்டித் தேர்வில் வெற்றி பெற்ற 4,010 பேருக்கு பணி நியமன ஆணை வழங்க மறுப்பது நியாயமல்ல: அன்புமணி

சென்னை, பிப்.23-

சுகாதார ஆய்வாளர்கள், கூட்டுறவு உதவியாளர் பணிக்கான போட்டித் தேர்வில் வெற்றி பெற்ற 4,010 பேருக்கு பணி நியமன ஆணை வழங்க வேண்டும் என தமிழக அரசை பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தி உள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், "தமிழ்நாடு அரசின் மருத்துவப் பணியாளர்கள் தேர்வு வாரியத்தின் சார்பில் 1429 சுகாதார ஆய்வாளர்களை தேர்வு செய்வதற்காக நடத்தப்பட்ட போட்டித் தேர்வின் முடிவுகள் வெளியிடப்பட்டு, சான்றிதழ் சரிபார்ப்பும் முடிவடைந்து விட்ட நிலையில், இன்று வரை அவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்படவில்லை. பல ஆண்டு காத்திருப்புக்கு பின்னர் அரசு வேலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகும் கூட அவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்க மறுப்பது நியாயமல்ல.

தமிழ்நாடு அரசின் மருத்துவத் துறைக்கு 1429 சுகாதார ஆய்வாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான அறிவிக்கை கடந்த ஆண்டு அக்டோபர் 27ம் தேதி வெளியிடப்பட்டு, அதனடிப்படையில் விண்ணப்பித்தவர்களுக்கு கடந்த டிசம்பர் 7ம் தேதி போட்டித் தேர்வு நடத்தப்பட்டு, அடுத்த சில வாரங்களில் முடிவுகள் வெளியிடப்பட்டன. அவர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு பணிகள் நிறைவடைந்து கடந்த 13ம் தேதி பணி நியமன ஆணை வழங்கப்படவிருந்த நிலையில், கடைசி நேரத்தில் அது கைவிடப்பட்டது.

இதற்குக் காரணம் சுகாதார ஆய்வாளர் பணிக்கான போட்டித் தேர்வில் முறைகேடு நடந்ததாகக் கூறி உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகள்தான் என்று கூறப்பட்டது. ஆனாலும், விசாரணையில் அது உண்மையில்லை என்று தெரியவந்ததையடுத்து அந்த வழக்கு முடித்து வைக்கப்பட்டது. ஆனால், இதற்கு முன்பு நடந்த தேர்வில் தேர்ச்சி பெற்றும் பணி கிடைக்காமல் தற்போது தொகுப்பூதியத்தில் பணிபுரிபவர்கள், தங்களுக்கு பணி நியமனம் வழங்க வேண்டும் என புதிய வழக்கு தொடர்திருப்பதால் நியமன ஆணை வழங்க உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

அதே போல், கூட்டுறவுத் துறையில் உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் 2581 பேரை தேர்ந்தெடுப்பதற்கான போட்டித் தேர்வுகள் கடந்த அக்டோபர் 5, 11 ஆகிய தேதிகளிலும், சான்றிதழ் சரிபார்ப்பு நவம்பர் 15, 21 ஆகிய தேதிகளிலும் நடத்தி முடிக்கப்பட்ட நிலையில், அந்தப் பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பட்டியல் இதுவரை வெளியிடப்படவில்லை. அதற்கும் நீதிமன்ற வழக்குகள்தான் காரணம் என்று கூறப்படுகிறது.

சுகாதார ஆய்வாளர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையினர் ஏற்கனவே கரோனா காலத்திற்கு சுகாதார ஆய்வாளர்களாக தற்காலிகமாக பணியாற்றி, அதன் பின் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் தற்காலிகமாக பணியாற்றி வருபவர்கள் ஆவர். தமிழ்நாட்டில் பத்தாண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் சுகாதார ஆய்வாளர்களை நிரந்தரமாக நியமிப்பதற்கான ஆள் தேர்வு நடைபெறுவதால் அதை வராது வந்த வாய்ப்பாக அவர்கள் கருதுகின்றனர். அந்த வாய்ப்பை அவர்களிடமிருந்து பறித்து விடக்கூடாது.

அதே போல், கூட்டுறவுத்துறை பணிக்கான தேர்வு எழுதியவர்களில் பல்லாயிரக்கணக்கானோர் பல ஆண்டுகளாக இந்தப் பணிக்கு காத்திருப்பவர்கள் ஆவர். அடுத்த சில நாள்களுக்குள் சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்படவுள்ள நிலையில், அறிவிக்கை வெளியானால், இந்த நியமனங்களை செய்ய முடியாமல் போய்விடும். எனவே, நீதிமன்ற வழக்குகளை காரணம் காட்டி அவர்களுக்கு கைக்குக் கிடைத்ததை வாய்க்கு கிடைக்காமல் செய்து விடக் கூடாது.

தமிழக அரசு உடனடியாக சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகி சுகாதார ஆய்வாளர்கள், கூட்டுறவுத் துறை உதவியாளர்கள் பணிக்கு தகுதியானவர்களை நியமிக்க விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டும். 1429 சுகாதார ஆய்வாளர்கள், 2581 கூட்டுறவுத்துறை உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் என 4,010 பேருக்கும் உடனடியாக பணி நியமன ஆணைகளை அரசு வழங்க வேண்டும். இவ்வாறு அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.



■ பணகுடி அருள்மிகு இராமலிங்க சுவாமி சிவகாமி அம்பாள் திருக்கோவில் கும்பாபிஷேக விழாவில், சட்டபேரவைத் தலைவர் மு.அப்பாவு கலந்து கொண்டு தரிசனம் செய்தார்.



# கருடன் வானில் வட்டமிட குறவன்குளம் மதுரைவீரன் சுவாமி திருக்கோவில் கும்பாபிஷேகம்

மதுரை, பிப்.23-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள குறவன்குளம் கிராமத்தில் அமைந்துள்ள, வடசீமை சீமானூர் வகையறாவுக்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ மதுரைவீரன் மற்றும் பரிவார தெய்வங்கள் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் பக்திப் பெருக்குடன் நடைபெற்றது.

ஸ்ரீ மதுரைவீரன், காளியம்மன், முனிச்சாமி, ஆண்டிச்சாமி, சங்கிலிகருப்பு, சின்னகருப்பு ஆகிய பரிவார தெய்வங்கள் திருக்கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. விழாவில் முதல் நாள் யாக வேள்வி பூஜையில் கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், லட்சுமி ஹோமம், பூர்ணாஹூதி மங்கல இசை முழங்க கோபூஜை, கணபதி பூஜை மற்றும் தீபாதாரணையும் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து இரண்டாம் நாள் காலை மங்கல இசை முழங்க மகா பூர்ணாஹூதி, தீபாராதனை நடைபெற்றது. ராமேஸ்வரம், அழகர்கோவில், காசி, கங்கை, உள்ளிட்ட திருத்தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் மேளதாளங்கள் முழங்க யாகசாலையை சுற்றி வலம் வந்து கோவில் கருவறையில் அமைந்துள்ள சுவாமிகளுக்கு வேத மந்திரங்கள் முழங்க கருடன் வானத்தில் வட்டமிட புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேக விழாவிற்கு வருகை தந்த உள்ளூர் மற்றும் சுற்று வட்டார கிராமத்தை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பூஜை பொருட்களும், அன்னதானமும் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை

வடசீமை சீமானூர் வகையறாக்கள் செய்திருந்தனர்.



# தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பு ஆலோசனை கூட்டம்: புதிய கொடி அறிமுகம்

அகரக்கட்டில், பிப்.23-

தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், அகரக்கட்டில் உள்ள அதன் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சமுதாய விழிப்புணர்வு மற்றும் புதிய சங்கக் கொடி அறிமுகம் உள்ளிட்ட முக்கிய நிகழ்வுகள் நடைபெற்றன.

*சௌந்திர பாண்டியனாருக்கு வீரவணக்கம்:*

கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாக, நாடார் சமுதாயத்தின் முதல் சட்டமன்ற உறுப்பினர் சௌந்திர பாண்டியனார் அவர்களின் 73வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, அவரது திருவுருவப் படத்திற்கு நிர்வாகிகள் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

*புதிய கொடியின் சிறப்பம்சங்கள்:*

கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் புதிய கொடியினை அறிமுகம் செய்து வைத்துப் பேசுகையில் அதன் முக்கியத்துவத்தை விளக்கினார்.

"வானத்தையும் பூமியையும் ஆண்ட சமுதாயம் நாடார் சமுதாயம்" என்பதைக் குறிக்கும் வகையில் நீலம் (வானம்) மற்றும் பச்சை (பூமி) வண்ணங்கள் அமைந்துள்ளன.

*அடையாளம்:* வானத்தில் இருந்து ஆளும் அகத்தியர், நம்மாழ்வார், வைகுண்டர், சேர்மன் அருணாசல சுவாமி போன்ற இறையடியார்களை நீல நிறமும், பூமியில் வாழும் மக்களைப் பச்சை நிறமும் பிரதிபலிக்கின்றன.

*அறிமுகம்:* இக்கொடியினை சென்னையில் திரைப்பட சண்டை பயிற்சி இயக்குனர் கலைமாமணி டாக்டர் ஜாகுவார் தங்கம் அவர்கள் முறைப்படி அறிமுகம் செய்து வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சியில் பொருளாளர் சுப்பிரமணியன் தென்காசி கிழக்கு மாவட்ட செயலாளர் கண்ணன்ராஜ் கடையநல்லூர் ஒன்றிய தலைவர் மணிகண்டன் ஒன்றிய இளைஞரணி செயலாளர் சுந்தர் துணைச் செயலாளர் சீனிவாசன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# 93 குழந்தைகளுக்கு ரூ.5 இலட்சம் நிதியுதவி தென்காசி மாவட்ட ஆட்சியர் வழங்கினார்



தென்காசி, பிப்.23-

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் சார்பில் மாவட்ட நிதி ஆதரவு திட்டத்தின் கீழ், கூட்டாண்மை சமூகப்பொறுப்பு (CSR) நிதியிலிருந்து மொத்தம் 93 குழந்தைகளுக்கு ரூ.5 இலட்சத்திற்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர் வழங்கினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில்,

தென்காசி மாவட்டத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் சார்பில் மாவட்ட நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் கூட்டாண்மை சமூகப்பொறுப்பு (CSR) நிதியிலிருந்து பெற்றோரை இழந்த, பெற்றோரால் கைவிடப்பட்ட ஊனமுற்ற பெற்றோரின் குழந்தைகள், பெற்றோரில் ஒருவரை இழந்த குழந்தைகள் 93 குழந்தைகளுக்கு 5 இலட்சத்திற்கான காசோலைகள் வழங்கப்பட்டது.

மேலும், பள்ளிக் குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக்கு குழந்தைகள் பாதுகாப்பு மையம் எண்.1098, குழந்தைத் தொழிலாளர் தடுப்பு சட்டம், இளைஞர் நீதிச்சட்டம் 2015, போக்சோ சட்டம் 2012 ஆகியவைகள் குறித்து விழிப்புணர்வு அளிக்கப்பட்டு விழிப்புணர்வு குறித்த பதாகைகளும் வழங்கப்பட்டது. அரசு அலுவலர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களும் இதுபோன்று குழந்தைகளுக்கு நிதியுதவி வழங்கிட முன்வர வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான சிறப்பு தடுப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் அறிவழகன், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் எல்.அலெக்ஸ், தூத்துக்கடி ஜிவிஜி பவுண்டேசன் தலைமை நிர்வாக அதிகாரி முத்தையா, நிர்வாக அதிகாரி ஜெயசங்கர், குழந்தை நலக்குழு உறுப்பினர் இஸ்மாயில்கனி, மாவட்ட சமூகநல அலுவலர் மதிவதனா, தொழிலாளர் நலத்துறை துணை ஆய்வாளர் மேதா பஸ்லின், குழந்தைகளுக்கெதிரான சிறப்பு தடுப்பு பிரிவு சார்பு ஆய்வாளர் ரத்தினபால்சாந்தி, குழந்தைகள் நலன் தொடர்புடைய அலுவலர்கள், குழந்தைகள் மற்றும் குழந்தைகளின் பெற்றோர்/பாதுகாவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# பழனியில் அரசு அலுவலர் ஒன்றிய செயற்குழு: “10% பங்களிப்பு இல்லாத ஓய்வூதிய திட்டம் வேண்டும்

பழனி, பிப்.23-

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாவட்ட செயற்குழு கூட்டம் பழனி ரோட்டில் உள்ள சங்க அலுவலகமான தானைத் தலைவர் சிவ.இளங்கோ அரங்கத்தில் மாவட்ட தலைவர் பார்த்தசாரதி தலைமையில் நடைபெற்றது .

செயற்குழுவில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநிலத் தலைவர்

வெ.மகேந்திரகுமார் பேருரை நிகழ்த்தினார். மாநில பொருளாளர் திலகர்,

மேனாள் மாநில பொதுச் செயலாளர். தேவேந்திரன்,மாவட்ட செயலாளர்.

பொன். இளங்கோ, துணைத் தலைவர் ரெங்கராஜ் , பன்னீர்செல்வம், ஆகியோர் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். மாவட்ட பொருளாளர்

பூமிபாலன் நன்றி கூறினார்.

மாவட்ட சங்கம், வட்டக்கிளைகளில் காலியாக இருந்த பொறுப்புகளுக்கு புதிதாக நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

1.தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தினை அரசு அலுவலர்களின் 10% பங்களிப்பு இல்லாமல் முழுமையாக அரசே ஓய்வூதிய திட்டத்தினை நிறைவேற்ற வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2.தொகுப்பூதியம், தினக்கூலி, ஒப்பந்த அடிப்படை பணி நியமனம் அறவே நீக்கப்பட வேண்டும்.

3.சில சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும்போது அனைத்து பணியாளர்களுக்கும் விடுப்பு மறுக்கப்படுவதை தவிர்க்காப்பட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# வேத மந்திரங்கள் முழங்க பெரிய இலந்தைகுளம் ஸ்ரீ நல்லதங்காள் கோவில் வருஷாபிஷேகம்

மதுரை, பிப்.23-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே பெரியஇலந்தைகுளம் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ நல்லதங்காள் திருக்கோவில் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு வருஷாபிஷேக விழா நடைபெற்றது. சிறப்பு யாகசாலை பூஜையில் பல்வேறு ஹோமங்கள், பூர்ணாகுதி, தீபாராதனை நடைபெற்றது.



தொடர்ந்து யாக சாலையில் இருந்து சிவாச்சாரியார்களின் வேத மந்திரங்கள் முழங்க கடம் புறப்பாடாகி அழகர்கோவில், ராமேஸ்வரம் உள்ளிட்ட புனித தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் கோவிலை சுற்றி வலம் வந்து சுவாமி சிலைகள் மீது ஊற்றப்பட்டு வருஷாபிஷேக விழா நடைபெற்றது. இதில் சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து அன்னதானம் வழங்கப்பட்டது.

விழா ஏற்பாடுகளை ஸ்ரீ நல்லதங்காள் கோவில் பங்காளிகள், பெரியஇலந்தைகுளம், குட்டிமேய்க்கிபட்டி, கோவிலூர், கீழக்கரை, அழகாபுரி, முடுவார்பட்டி, 15.பி.மேட்டுப்பட்டி, செம்புக்குடிப்பட்டி, மதுரை, அலங்காநல்லூர் மற்றும் விழா குழுவினர் செய்திருந்தனர்.



■ தென்காசி மாவட்டம் சங்கரன் கோவிலில் சங்குபுரம் மூன்றாம் தெருவில், தேசிய ஜனநாயக கூட்டணி இணைந்து நடத்தும் நாளை நமதே தமிழ்நாடும் நமதே தெரு முனைப் பிரச்சாரம் 29 பூத் சக்தி கேந்திர பொறுப்பாளர் பாஜக நகரச் செயலாளர் R. மனோஜ் குமார் தலைமையில் நடைபெற்றது.




# அஜித் பவார் உயிரிழப்பு: அமைச்சரை பதவி நீக்க பிரதமருக்கு கடிதம்

மும்பை, பிப்.23-

பிரதமர் நரேந்திர மோடிக்கு தேசியவாத காங்கிரஸ் கட்சியின் (சரத் பவார்) பொதுச் செயலரும், எம்எல்ஏவுமான ரோஹித் பவார் எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது: மகாராஷ்டிர துணை முதல்வர் அஜித் பவார் சென்ற விமானம் விபத்துக்குள்ளானதில் பவார் உட்பட 5 பேர் உயிரிழந்தனர். அந்த விமானம் விஎஸ்ஆர் நிறுவனத்துக்குச் சொந்தமானது.

அந்த நிறுவனத்துக்கும், மத்திய அமைச்சர் ராம் மோகன் நாயுடுவுக்கும் தொடர்புகள் உள்ளன. எனவே, அவரை பதவியில் இருந்து ராஜினாமா செய்யுமாறு வலியுறுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000